இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 23 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 17 – செவ்வாய்க்கிழமை 02 செப்டம்பர் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 23: Thiruvalluvar Year - 2056 - Aavani 17 - Tuesday 02 September 2025 - Dak 16 Pages ₹ 5.00


## தமிழையும் தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் மறவாதீர்!

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாரீர்!

## ஜெர்மன் வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**பெர்லின், செப். 2 -**

**"தமிழையும் தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் மறவாமல் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாரீர்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜெர்மன் வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.8.2025) ஜெர்மனி நாட்டின் கொலோன் நகரில் (Cologne) நடைபெற்ற 'மாபெரும் தமிழ் கனவு' ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

அப்படியே உங்கள் முகத்தை எல்லாம் தொடர்ந்து அமைதியாக பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது.

இப்படிதான் ஒரு முறை எங்களை எல்லாம் ஆளாக்கிய நம்முடைய ஒப்பற்றத் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுகின்றபோது சொன்னார். அதிலும் குறிப்பாக, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்றபோது இதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். இரண்டு நிமிடம் பேசாமல் இருந்திருக்கிறார். எல்லோருக்கும் கொஞ்சம் வியப்பாக இருந்திருக்கிறது. உடம்பு ஏதாவது சரியில்லையா? தொண்டை ஏதும் சரியில்லாமல் இருக்கிறதா? அதற்குப் பிறகு பேச ஆரம்பித்திருக்கிறார். அந்த உணர்வுதான் எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

முதலில் எல்லோருக்கும் என்னுடைய அன்பான வணக்கம். எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா! மகிழ்ச்சி!

ஜெர்மனியில் நடைபெறக்கூடிய இந்த மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்வில் பங்கேற்றிருக்கக்கூடிய தொழில்துறை அமைச்சர் அருமை தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்களே,

ஜெர்மனிக்கான இந்திய தூதரகத்திலிருந்து வந்திருக்கக்கூடிய மதிப்பிற்குரிய அபிஷேக் துபே உள்ளிட்ட தூதரக அதிகாரிகளே,

அரசு செயலாளர்கள் அருண் ராய், அவர்களே, தாரேஷ் அகமது, அவர்களே,

என்னுடைய துணைவியாரும் வந்திருக்கிறார்கள், கோபித்துக் கொள்ளக் கூடாது - என்னுடைய துணைவியார் துர்கா ஸ்டாலின் அவர்களே,



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 31.8.2025 அன்று ஜெர்மனி நாட்டின் கொலோன் நகரில் (Cologne) நடைபெற்ற மாபெரும் தமிழ் கனவு – ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, பெர்லினில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே, ஜெர்மனி மற்றும் ஐரோப்பா வாழ் தமிழ் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு எப்போதும் துணையிருப்போம்!

இந்த நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக்கூடிய வெளிநாடு வாழ் இந்திய தமிழ் சங்கத்தின் நிர்வாகிகளே,

ஜெர்மனி மட்டுமல்ல, பல்வேறு ஐரோப்பிய நாட்டிலிருந்து வருகை தந்திருக்கக்கூடிய தமிழ் உடன்பிறப்புக்களே,

என்னுடைய உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே,

உங்கள் எல்லோருக்கும் அன்பான வணக்கம்.

**இதுதான் உண்மையான தமிழ்ப்பாசம், தமிழினப் பாசம்!**

பல்லாயிரம் கிலோ மீட்டர்களைக் கடந்து, வேறொரு நாட்டில் நீங்களும், நானும் சந்திக்கின்றபோது ஏற்படுகின்ற இந்த மகிழ்ச்சிதான், உண்மையான தமிழ்ப் பாசம்! தமிழினப் பாசம் இது!

"உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும், தமிழன் இருப்பான்; தமிழ்க் குரலைக் கேட்கலாம்" என்று சொல்கின்ற அளவுக்கு உலகெல்லாம் பரவி, தங்களுடைய அறிவால், உழைப்பால் உயர்ந்திருக்கின்ற இனம்தான், நம்முடைய தமிழினம்! நம்முடைய இனத்திற்கான இதுதான் மிகப் பெரிய பெருமையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

நில எல்லைகளும், கடல் எல்லைகளும் நம்மைப் பிரித்தாலும், மொழியும், இனமும் நம்மை இணைக்கின்றது!

கண்டங்களைக் கடந்துவிட்டாலும், நம்முடைய தொப்புள் கொடி அறுந்துவிடவில்லை!

**பேரறிஞர் அண்ணாதான் சொல்வார். "ஒருதாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால், தனித்தனி தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புகள் நாம்" என்று சொல்வார். அப்படி உடன்பிறப்புகளாக, தமிழர்களான நாம் இணைந்திருக்கிறோம்!**

ஜெர்மனி நாட்டில் உங்கள் எல்லோரையும், அதுவும் உங்கள் ஒவ்வொருவரையும் சந்திக்கின்றபோது மகிழ்ச்சி. நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதிப்புமிக்க பொசிஷனில் இருப்பதை பார்க்கும்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சராக, திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவனாக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமை அடைகிறேன்!

**திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முன்னேற்றம்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டில் அமைந்த பிறகு, தமிழ்நாடு எல்லா வகையிலும் இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தொழில் வளர்ச்சியில், மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழ்நாட்டு வளர்ச்சியைப் பற்றி நீங்கள் எல்லாம் செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள் சோஷியல் மீடியாக்களில் பார்த்திருப்பீர்கள். இங்கு இருக்கக்கூடிய உறவினர்கள், நண்பர்கள் மூலமாக கேள்வியும் பட்டிருப்பீர்கள். இந்த வளர்ச்சியை இன்னும் இன்னும் விரைவுப்படுத்த வேண்டும் என்று தான் முதலீட்டாளர்கள் மாநாடு, அதாவது முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டு பயணம் ஆகியவற்றை நான் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### கட்டாயக் கல்வித் திட்டத்திற்கு நிதி உதவி!

## ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

### தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உத்தரவு!

*புதுடெல்லி, செப். 2 -*

*கட்டாயக் கல்வி உரிமைத் திட்டத்துக்கான நிதி அளிக்கக் கோரி தமிழ்நாடு அரசு தொடந்த வழக்கில், ஒன்றிய அரசு பதிலளிக்குமாறு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.*

*கட்டாயக் கல்வி திட்டத்துக்கான நிதி குறித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்த போது தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வில்சன், கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 153 கோடி ரூபாய் வரை கட்டாய கல்வி உரிமைத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு செலவு செய்துள்ளதாகவும், இத்திட்டத்திற்கான ஒன்றிய அரசின் பங்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.*

*இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இவ்விவகாரம் குறித்து ஒன்றிய அரசு 4 வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.*

## பீகாரில் பெயரை நீக்கக்கோரும் 2 லட்சம் வாக்காளர்கள்!

### தேர்தல் ஆணைய அறிவிப்பில் சந்தேகம்!

*புதுடெல்லி, செப். 2 -*

*பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்கக் கோரி 2 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது சந்தேகத்தை எழுப்பியுள்ளது.*

*பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் ஏற்கனவே 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கெடு நேற்றுடன் முடிந்தது. இந்த நிலையில், பீகார் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு 15 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. அதே சமயம், விசித்திரமாக 2 லட்சத்து ஏழாயிரம் பேர் தங்களது பெயர்களை நீக்க கோரியுள்ளதாக தெரிவித்துள்ளது. வழக்கமாக வேறொரு இடத்திற்கு குடியேறும்போது அந்த இடத்தின் முகவரியில் வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க ஏதுவாக, பழைய பட்டியலில் இருந்து பெயரை நீக்க கோருவார்கள். பெயரை நீக்க விண்ணப்பங்கள் எண்ணிக்கை எப்போதும் மிகக் குறைவாகதான் இருக்கும். ஆனால், 2 லட்சம் பேர் ஒரே நேரத்தில் பெயரை நீக்க ஏன் கோரியுள்ளனர் என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் வலுவாக எழுப்பியுள்ளன.*

### பூலித் தேவர் பிறந்தநாள்!

## அந்நியர் ஆதிக்க எதிர்ப்பின் பெருமைமிகு தமிழ் அடையாளம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை,செப்.2-

"பூலித் தேவர் பிறந்தநாள் - அந்நியர் ஆதிக்க எதிர்ப்பின் பெருமைமிகு தமிழ் அடையாளம்" என்று அவரது பிறந்தநாளை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**அந்நியர் ஆதிக்க எதிர்ப்பின் பெருமைமிகு தமிழ் அடையாளமான பூலித்தேவர் அவர்களின் பிறந்தநாள்!**

**சிப்பாய்ப் புரட்சிக்கும் நூறாண்டுகளுக்கு முன்பே தமிழ் நிலத்தில் புரட்சி வெடித்துவிட்டது! தென்னகம் அந்நியருக்குப் பட்டா போட்டு தரப்படவில்லை எனப் பறைசாற்றும் விதமாகப் போரிட்டு, இந்திய விடுதலைப் போராட்டத்துக்கான தொடக்க வுரை எழுதிய பூலித்தேவரின் புகழ் போற்றுகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.